திரு. ஜி. கே. ஜெ. பாரதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தலைநகருக்குள்ளே அந்நிய நாட்டு முதலாளிகளி னுடைய தொழிலகத்தை உண்டாக்குகிறபொழுது, 100 சதவிகிதம் உற்பத்தித் திறனை வைத்து வெளி நாட்டுக்கு ஏற்றுமதி செய்கிற பொருள்கள் தயாரிக்கப்படுகின்றன என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அவற்றிலே என்ன, என்ன பொருள்களை உற்பத்தி செய்கிறார்கள் என்ற ஒரு பட்டியலைத் தமிழக அரசினுடைய அமைச்சர் தருவாரா?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, தற்போது என்னிடத்திலே பட்டியல் இல்லை. ஆனால் 16 தொழில்கூடங்கள் இன்றைக்கு ஏற்றுமதி வளாகத்தில் மிகச் சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. ரூ. 10 கோடியே 39 இலட்சம் மூலதனத்தில் நடைபெற்றுக் கொண்டி ருக்கிறது, வெற்றிகரமாக இருக்கிறது. ஏராளமான பொருள் களை உற்பத்தி செய்து வருகிறார்கள். நான் சென்று பார்த்த வகையில், அங்கே 'ரெடிமேட் கிளாத்' உற்பத்தி செய்து அனுப்பு கிறார்கள் ; ஜெம் கட்டிங் என்ற ஒரு பகுதி இருக்கிறது. இன்னொரு பகுதியில், விஞ்ஞான இரசாயனப் பொருளை உற்பத்தி செய்து அனுப்புகிறார்கள், பிளாஸ்டிக் பொருளைச் செய்து அனுப்புகிறார்கள். அதோடு எலெக்ட்ரானிக் பொருள்களைச் செய்ய, பி. சி. ரெட்டி என்ற ஒருவர் ரூ. 5, 10 கோடி மூலதனம் போட்டு தொழில் ஆரம்பித்திருக்கிறார். ஆகவே, இந்த ஆண்டு ரூ. 100 கோடி ஏற்றுமதி செய்ய முடியும் என்று கணக்கிட்டு இருக்கிறார்கள்.

அண்ணா நகர் தொகுதி அரும்பாக்கம் அருகில் கூவம் ஆற்றின் வடிகால் நீர்

591—(*வினா எண் 3832) **திரு. சோ. மா. இராமச்சந்திரன் :** மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) அண்ணா நகர் தொகுதி அரும்பாக்கம் அருகில் கூவம் ஆற்றில் வடிகால் நீரை விடுவதால் அரும்பாக்கத்தில் அருகிலுள்ள கிணறுகளில் நீர் உபயோகமற்றதாகி வருவது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், அப் பகுதிக்கு வடிகால் வசதி செய்து தர எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

1987 மே 5]

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) இல்லை. கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்தில் உயிரியல் முறையில் சுத்தம் செய்யப்பட்ட கழிவுநீர், புல் பண்ணைக்கு உபயோகப்படுத்தப்பட்டு எஞ்சியுள்ள சுத்திகரிக்கப்பட்ட கழிவு நீர் மட்டுமே கூவம் ஆற்றில் விடப்படுவதால் இப்பகுதியில் உள்ள கிணற்று நீர் மாசு படவோ, அதனால் உபயோகமற்றதாக மாறிவிடவோ வழியில்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

சென்னையில் "டிட்கோ" மூலம் அனல் மின் நிலையம் அமைத்தல்

592—(*வினா எண் 6796) திரு. இரா. தாமரைக்கனி மற்றும் திரு. கே. சுப்பராயன்: மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழக அரசின் "டிட்கோ" மூலம் சென்னையில் அனல் மின் நிலையம் நிறுவ அரசு முடிவு செய்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அது பற்றிய விவரம் என்ன?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) 210 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்யக்கூடிய அனல் மின் நிலையம் ஒன்றை சென்னையருகே உள்ள மணலியில் டிட்கோ மூலம் கூட்டுத் துறையில் நிறுவ திட்டமிடப்பட்டுள்ளது. மைய அரசின் ஒப்புதல் கிடைத்தவுடன் மின் நிலையம் அமைக்கும் பணி தொடங்கப்படும்.

திரு. இரா. தாமரைக்கனி: பேரவைத் தலைவர் அவர்களே, எவ்வளவு ரூபாய் செலவில் இந்தத் திட்டம் நிறைவேற்றப்பட இருக்கிறது? மேலும் தமிழ்நாட்டில் பல மாவட்டங்களில் தொழில்பேட்டைகள், தொழிற்சாலைகள் எல்லாம் இருக்கின்றன. மின்சாரம் பற்றாக்குறையாக இருக்கிற காரணத்தால் டிட்கோ மூலம் மாவட்டங்களில் இப்படி அனல் மின் நிலையம் அமைக்க அரசு முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவர் அவர்களே, அனல் மின் நிலையத்தைப் பொறுத்தவரையில் 1 மெகாவாட் உற்பத்திக்கு ரூ. 1 கோடி செலவு என்பது சாதாரண கணக்கு. இப்பொழுதிருக்கிற விலைவாசி ஏற்றத்தின் காரணமாக அது